# <u>மணப்பாறை நகராட்சி</u>

**2018 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் (02.02.2018) 02 –ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>02.02.2018</td><td>பொருள் – 1<br>தமிழ்நாடு மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3174/2017/தே.பே.1 நாள்.13.12.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ள படி மணப்பாறை நகர்மன்ற வார்டுகள் 27 எண்ணிக்கை தயாரிக்கப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் 29.12.2017 அன்று பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. மேற்படி வரைவுகள் மீதான ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு மேற்படி ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களை தமிழ்நாடு மறுவரையறை ஆணையர் தலைமையில் 29.01.2018 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதிசெய்யப்பட்ட வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>( ந.களண்.. 1741/2017/எப்1 )<br>அலுவலக குறிப்பு: இறுதிசெய்யப்பட்ட வார்டு மறுவரையறை கருத்துருவிற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.</td><td>தீர்மான எண். 289<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>02.02.2018</td><td>பொருள் – 2<br>மணப்பாறை நகராட்சியில் 20.02.2018 –ல் நடைபெற உள்ள பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி இனங்களுக்கு பொதுக்கட்டுப்பாடு மற்றும் தனிக்கட்டுப்பாடுகள் புத்தகம் அச்சடிக்க உள்ளூர் அச்சகங்களிலிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>அச்சகங்களின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>சுனில் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், 20, வ.ஊ.சி தெரு, மணப்பாறை</td><td>ரூ.15480/–</td></tr>
<tr><td>2.</td><td>பிரின்ஸி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் மற்றும் ஜெராக்ஸ், 29, வண்டிப்பேட்டைத்தெரு, மணப்பாறை.</td><td>ரூ.15950/–</td></tr>
<tr><td>3.</td><td>ஜோதி பிரிண்டர்ஸ், 57, ரயில்வே ஸ்டேசன் ரோடு, மணப்பாறை.</td><td>ரூ.16275/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.290<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சுனில் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், 20, வ.ஊ.சி தெரு, மணப்பாறை அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.25/2018/அ2) | |
| 02.02.2018 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சி நகரமைப்பு பிரிவில் 1920 ம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு மாநில நகரமைப்பு சட்டம் பிரிவு 321 (2)ன் கீழ் கட்டிட உரிமம் வழங்கப்பட வேண்டியதற்கு விதிக்கப்படும் கட்டணங்கள் அட்டணையில் கண்டுள்ளவாறு திருத்தி அமைக்க முடிவு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டதை தொடர்ந்து பொதுமக்கள் அறியும் வண்ணம் 13.12.2017–ம் தேதிய தினமணி நாளிதழ் மற்றும் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்யப்பட்டது.<br>இதுவரை ஆட்சேபணைகள் புகார்கள் ஏதும் அலுவலகத்தில் பெறப்படவில்லை. எனவே 01.04.2018 ஏப்ரல் முதல் மன்றத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட புதிய கட்டண விகிதங்களை அமுல்படுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 291**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 02.02.2018 | **பொருள் – 4**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2017–18ம் ஆண்டிற்கான சீருடைகள் அரசு சார்ந்த நிறுவனம் மூலம் வாங்கி வழங்கவும் அதற்கான தையல் கூலி வழங்கவும் தோரய செலவினம் ரூ.1,65,000/– (ஒரு இலட்சத்தி அறுபத்தைந்தாயிரம் மட்டும்) –க்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.160/2018/எச்1) | **தீர்மான எண். 292**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 02.02.2018 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN 45 AZ -2257 க்கு தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பணிக்கு உண்டான தோராய செலவினம் ரூ.42,000/– (ரூபாய் நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) செலவிட கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் | **தீர்மான எண். 293**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>02.02.2018</td><td>பொருள் – 6<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TAX 2402 க்கு தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பணிக்கு உண்டான தோராய செலவினம் ரூ.35,000/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) செலவிட கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்</td><td>தீர்மான எண்.294<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>02.02.2018</td><td>பொருள் – 7<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY 1660 க்கு தகுதிச்சான்று பெற மராமத்து பணிகள் மேற்கொள்ள உண்டான தோராய செலவினம் ரூ.35,000/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) செலவிட கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.</td><td>தீர்மான எண். 295<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>02.02.2018</td><td>பொருள் – 8<br>மணப்பாறை நகராட்சியில் 20.02.2018 –ல் நடைபெற உள்ள பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளியை ஒலிபெருக்கி மூலம் ஏலம் நடத்த உள்ளூர் நிறுவனங்களிலிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr><tr><td>1.</td><td>எ.எஸ்.சவுண்ட் சர்வீஸ், மஞ்சம்பட்டி, மணப்பாறை.</td><td>ரூ.3900/–</td></tr><tr><td>2.</td><td>நியூ பாத்திமா ஆடியோ மற்றும் லைட்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை.</td><td>ரூ.3750/–</td></tr><tr><td>3.</td><td>ராஜன் சவுண்ட் சர்வீஸ், 352, கோவில்பட்டி ரோடு, மணப்பாறை</td><td>ரூ.4100/–</td></tr></table>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியூ பாத்திமா ஆடியோ மற்றும் லைட்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.25/2018/அ2)</td><td>தீர்மான எண். 296<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>02.02.2018</td>
<td>
பொருள் – 9<br>
மணப்பாறை நகராட்சியில் 20.02.2018 –ல் நடைபெற உள்ள பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளியை வீடியோ முலம் ஒளிப்பதிவு செய்ய உள்ளூர் நிறுவனங்களிலிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீ முருகன் ஸ்டுடியோ மற்றும் வீடியோ, ஏட்டுத்தெரு, மணப்பாறை.</td><td>ரூ.9000/–</td></tr>
<tr><td>2.</td><td>நியூ செல்வம் ஸ்டுடியோ, 13பி, ஏட்டுத்தெரு, மணப்பாறை.</td><td>ரூ.8000/–</td></tr>
<tr><td>3.</td><td>செல்வா ஸ்டுடியோ மற்றும் வீடியோ கவரேஜ், 19/19, சர்ச் காம்ப்ளெக்ஸ், மணப்பாறை.</td><td>ரூ.7000/–</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள செல்வா ஸ்டுடியோ மற்றும் வீடியோ கவரேஜ், 19/19, சர்ச் காம்ப்ளெக்ஸ், மணப்பாறை அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.25/2018/அ2)
</td>
<td>தீர்மான எண். 297<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>02.02.2018</td>
<td>
பொருள் – 10<br>
இந்நகராட்சியில் 2018–19 முதல் 2020–2021 மூன்றண்டு குத்தகை இனங்கள் வருகின்ற 20.02.2018–ல் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ந.க.எண்.03/செ.ம.தோ/2018, நாள்.01.02.2018 தேதிய கடிதத்தின்படி 02.02.2018–ல் தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.12642/– ஐ பிரைட் அட்வர்டைஸ்மெண்ட் நிறுவனத்திற்கு வழங்கவும், செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.25/2018/அ2)
</td>
<td>தீர்மான எண். 298<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

தனி அலுவலர்
மணப்பாறை நகராட்சி